Registered as News Paper | பக்கங்கள் 04 | விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM | PEOPLES DAILY | மக்கள் தினசரி

நாதம் 02 | திருவள்ளுவர் ஆண்டு 2022 | ஐப்பசி 08 | (25-10-1991) | வெள்ளிக்கிழமை | ஓசை 249

## ஆசிரியர் பரீ.விண்ணப்ப திகதி பிற்போடப்பட மாட்டாது

கணித விஞ்ஞான பயிலுனர் ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர் பரீட்சைகளுக்கான விண்ணப்ப திகதிகள் எக்காரணம் கொண்டும் பிற்போடப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது விண்ணப்பங்கள் கோரப்படும் திகதி பிற்போடப்படுவதைத் தவிர்ப்பதற்கான கோரிக்கைகள் ஏற்படாதிருக்க இதுதொடர்பான தேவையான அறிவித்தல்களை மேற்கொள்ளவும் கொழும்புப் பரீட்சைப் பகுதி தீர்மானித்துள்ளது கணித விஞ்ஞான பயிலுனர் ஆசிரியர் பரீட்சை விண்ணப்பங்கள் 11-11-91 வரையும், பட்டதாரி பயிலுனர் ஆசிரியர் விண்ணப்பம் 25-11-91 வரையும் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளது. (4 ஆம் பக்கம் பார்க்க)

# ஆனையிறவு வழியாக போக்குவரத்து

# புலிகளுடன் இணக்கம் காண முயற்சி!

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு ஊடாக கண்டி வீதியால் வாகனப் போக்குவரத்தை விரைவில் ஆரம்பிக்க சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் முயற்சிசெய்துவருகிறது இது சம்பந்தமாக சிறிலங்கா அரசு தரப்புடனும் விடுதலைப் புலிகள் இயக்கத்துடனும் செஞ்சிலுவைச் சங்கம் பேச்சுக்களை நடத்திவருகிறது. இது குறித்து விரைவில் ஒரு இணக்கம் ஏற்படலாமென தெரியவருகிறது.

தற்போதைய போர்ச் சூழ்நிலை காரணமாக யாழ்குடாநாட்டின் உணவு விநியோகமும், மக்களின் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளதை அடுத்து ஆனையிறவு பாதையை போக்குவரத்திற்கு அனுமதிக்குமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் விடுதலைப்புலிகளிடமும் சிறிலங்கா அரசாங்கத்திடமும் கோரியுள்ளது செஞ்சிலுவைச் சங்கத்தின் இக் கோரிக்கையை விடுதலைப் புலிகள் இயக்கம் சாதகமாகப் பரிசீலனை செய்து வருவதாக தெரிகிறது.

இதேவேளை, நேற்று செய்தியாளரிடம் பேசிய சிறிலங்கா இராணுவ பேச்சாளர் கேணல் முனசிங்கவும் ஆனையிறவு பாதை மக்களின் பாவனைக்கு விரைவில் திறக்கப்படலாம் எனவும் தெரிவித்தார்.

## ஒப்பரேசன் வலம்புரி நடவடிக்கை பூர்த்தியாம்

(கொழும்பு)

ஒப்பிரேசன் வலம்புரி இராணுவ நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க கொழும்பில் நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் பேசுகையில் யாழ்ப்பாண நகரத்தைப் பிடிக்கிறோமா இல்லையா என்பதல்ல இன்றுள்ள கேள்வி (4ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கின் இன்றைய நெருக்கடி நிலைக்கு காமினியே காரணம்

-பிரேமதாசா

(கொழும்பு)

'வடக்குக் கிழக்கின் தற்போதைய நிலையை உருவாக்கிய பிரதான நபர் காமினி

தேர்தல் நடைபெறுவதற்கு முதல் நாள் அவர் நிறைய ஆட்களைக் கொண்டு யாழ்ப்பாணம் சென்றார். யாழ்ப்

மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தல்களில் சந்தேகவேளைகள் இடம் பெற்ற பின்னர் ஒரு சர்வதேச நால் நிலைய

## பதுக்கலைக் கட்டுப்படுத்த பாவனையாளர் பாதுகாப்புக் குழு

(யாழ்ப்பாணம்)

உணவுப் பொருள் பதுக்கல் மற்றும் விலையேற்றம் போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் கிராம சேவையாளர் பிரிவுகளிலும் பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படும்.

யாழ். அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அரச சார்பற்ற பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் நுகர்வோர் பிரதிநிதிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப்பிரதிநிதிகள் சனசமூகநிலையப் பிரதிநிதிகள் ஆகியோர்கள் பாவனையாளர் பாதுகாப்புக் குழுவில் அங்கம் வகிப்பார்கள் என்றும், உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள குழுக்களுக்கு உதவி அரசாங்க அதிபரும் கிராமசேவையாளர் பிரிவிலுள்ள குழுக்களுக்கு கிராம சேவையாளரும் தலைமை தாங்குவார்கள் என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர் சீரான உணவு விநியோகம் மற்றும் அப்பிரதேசத்திற்கு தேவைப்படுகின்ற உணவுப்பொருள் தொகை ஆகியவற்றினைக் கண் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மொத்த விற்பனையாளர் பொருள்களின் கையிருப்பை அறிவிக்க வேண்டுகோள்

இன்றைய நெருக்கடி நிலையையுமுன்னிட்டும் சாதாரண பொதுமக்களுக்கு நாளாந்தம் வேண்டிய உணவுப் பொருள்கள் சீராகக் கிடைக்கும் பொருட்டும் இருக்கும் உணவுப் பொருள்களை ஒழுங்கான முறையில் விநியோகிப்பதற்காகவும் வர்த்தகர்கள் பின்வரும் ஒழுங்கு விதிகளைக்

பால்மா, மண்ணெண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகிய பொருள்களை தனியார் விற்பனை நிலையங்கள், மொத்த விற்பனை நிலையங்கள் விற்பனை நிறுத்தும்படி வேண்டு (4 ஆம் பக்கம் பார்க்க)

## தீவகத்தில் சிக்கிய 300 பேர்

## அதிபர்கள் ஆசிரியர்கள் சமூகம் தரவும்

(நமது நிருபர்)

சுழிபுரம், காரைநகர், வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு இளவாலை கொத்தணிப் பாடசாலைகளில் கடமையாற்றும் சகல அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்திற்குச் சமூகம் தரும்படி பிரதிக் கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தெல்லிப்பளை, அம்பனை, அளவெட்டி/மல்லாகம், காங்கேசன்துறை கொத்தணிப் பாடசாலைகளில் கடமை [4 ஆம் பக்கம் பார்க்க]

## புங்குடுதீவில் இராணுவத்திடம் 70 லட்ச. ரூபா பெறுமதியான உணவுப்பொருள் சிக்கியது

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு கூட்டுறவு உணவுக் களஞ்சியசாலைகளிலும், கூட்டுறவுக் கிளைகளிலும் சுமார் 70 லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் சிக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

சமீபத்திய இராணுவ நடவடிக்கையை அடுத்து மூன்று லொறிகளில் மட்டும் உணவுப் பொருள்கள் யாழ் நகரப் பகுதிக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தவிர கூட்டுறவுச்சங்கத்திற்குரிய பல வாகனங்கள் புங்குடுதீவில் உள்ளதாகவும் கூறப்பட்டது (இ)

## சகல தினங்களிலும் திறப்பு

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர்களின் நலன் கருதி சனி, ஞாயிறு உட்பட விடுமுறை தினங்கள் அனைத்திலும் முழு நேரமும் திறந்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு ஊடாக கண்டி வீதியால் வாகனப் போக்குவரத்தை விரைவில் ஆரம்பிக்க சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் முயற்சிசெய்துவருகிறது. இது சம்பந்தமாக சிறிலங்கா அரசு தரப்புடனும் விடுதலைப் புலிகள் இயக்கத்துடனும் செஞ்சிலுவைச் சங்கம் பேச்சுக்களை நடத்திவருகிறது. இது குறித்து விரைவில் ஒரு இணக்கம் ஏற்படலாமென தெரியவருகிறது.

தற்போதைய போர்ச் சூழ்நிலை காரணமாக யாழ் குடாநாட்டில் உணவு விநியோகமும், மக்கள் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளதை அடுத்து ஆனையிறவு பாதையை போக்குவரத்திற்கு அனுமதிக்குமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் விடுதலைப்புலிகளிடமும் சிறிலங்கா அரசாங்கத்திடமும் கோரியுள்ளது. செஞ்சிலுவைச் சங்கத்தின் இக் கோரிக்கையை விடுதலைப் புலிகள் இயக்கம் சாதகமாகப் பரிசீலனை செய்து வருவதாக தெரிகிறது.

இதேவேளை, நேற்று செய்தியாளரிடம் பேசிய சிறிலங்கா இராணுவ பேச்சாளர் கேணல் முனசிங்காவும் ஆனையிறவு பாதை மக்களின் பாவனைக்கு விரைவில் திறக்கப்படலாம் எனவும் தெரிவித்தார்.

## ஒப்பரேசன் வலம்புரி நடவடிக்கை பூர்த்தியாம்

(கொழும்பு)

ஒப்பிரேசன் வலம்புரி இராணுவ நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க கொழும்பில் நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் பேசுகையில் யாழ்ப்பாண நகரத்தைப் பிடிக்கிறோமா இல்லையா என்பதல்ல இன்றுள்ள கேள்வி

(4ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு-கிழக்கின்

# இன்றைய நெருக்கடி நிலைக்கு காமினியே காரணம்

-பிரேமதாசா

(கொழும்பு)

'வடக்குக் கிழக்கின் தற்போதைய நிலையை உருவாக்கிய பிரதான நபர் காமினி திசநாயக்காவே'' என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா குறிப்பிட்டுள்ளார்.

1981ஆம் ஆண்டு யூன் மாதம் 1ஆம் திகதி யாழ். பொதுநூலகம் எரிக்கப்பட்டது குறித்து காமினி திசநாயக்கா எழுதிய மறு புக் கடிதத்திற்கு பதில் எழுதிய பிரேமதாசா தனது கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார். இக்கடிதத்தின் விபரங்கள் சில வருமாறு;

பாராளுமன்றத்தில் மாவட்ட அபிவிருத்திச்சபை முறையை நான் கொண்டுவந்து அதிகாரத்தை பரவலாக்க முயன்றபோது காமினி திசநாயக்காவே அதனை எதிர்த்தார். தேர்தல்கள் நடைபெற்றன. தேர்தல் நடைபெறுவதற்கு முதல் தான் அவர் நிறைய ஆட்களைக் கொண்டு யாழ்ப்பாணம் சென்றார். யாழ்ப்பாணம் சென்ற அவர் வாக்குச் சீட்டுப் பெட்டிகளை சேகரித்து கள்ள வாக்குகளைப் போட்டார்.

மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தல்களில் சுதந்திர வேட்பாளர்கள் இடம் பெற்ற பின்னர் ஒரு சர்வதேச நூல் நிலையமான யாழ் நூலகம் எரிக்கப்பட்ட பின்னர் வாக்குச் சீட்டுக்கள் நீதியைப் பெறுவது

(4ஆம் பக்கம் பார்க்க)

## பாராளு. நேற்று குழப்பம்; சபை ஒத்திவைப்பு

சபாநாயகர் எம். எச். முகமட்டை சபாநாயகராக ஏற்றுக்கொள்ள முடியாது என்று எதிர்க்கட்சிகள் நேற்று இரண்டாவது நாளாகக்குழப்பத்தில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

பாராளுமன்ற நடவடிக்கைகளால் பொதுமக்கள் பார்வையிட ஒதுக்கப்பட்டிருக்கும் இருப்பிடங்கள் நேற்றுப் பொதுமக்களுக்கு மூடப்பட்டிருந்ததைத் தொடர்ந்து ஆத்திரமடைந்த எதிர்க்கட்சியினர் கூச்சலிட்டனர்.

இங்கு நடப்பது ஜனநாயகமா அல்லது சர்வாதிகாரமா என்று எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் எம். டி. ஜெயரெட்னா பாராளுமன்றத்தில் கூச்சலிட்டார்.

# சுதந்திரக்கட்சி செயலாளராக அனுரா பண்டாரநாயக்கா தெரிவு

## கட்சிக்குள் குழப்பநிலை அதிகரிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளராக அநுரா பண்டாரநாயக்கா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அநுரா பண்டாரநாயக்காவின் ஆதரவாளரான சூரிய பெருமாவை கட்சியிலிருந்து பதவி நீக்கியதன் மூலம் தனி நபர் அதிகாரத்தை சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் கொண்டுவர முயன்ற சிறிமாவின் முயற்சி தோல்வி கண்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

(4ஆம் பக்கம் பார்க்க)

# பதுக்கலைக் கட்டுப்படுத்த பாவனையாளர் பாதுகாப்புக் குழு

(யாழ்ப்பாணம்)

உணவுப் பொருள் பதுக்கல் மற்றும் விலையேற்றம் போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் கிராம சேவையாளர் பிரிவுகளிலும் பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படும்.

யாழ். அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அரச சார்பற்ற பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் நுகர்வோர் பிரதிநிதிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப்பிரதிநிதிகள் சனசமூகநிலையப் பிரதிநிதிகள் ஆகியோர்கள் பாவனையாளர் பாதுகாப்புக் குழுவில் அங்கம் வகிப்பார்கள் என்றும், உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள குழுக்களுக்கு உதவி அரசாங்க அதிபரும் கிராமசேவையாளர் பிரிவிலுள்ள குழுக்களுக்கு கிராம சேவையாளரும் தலைமை தாங்குவார்கள் என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர் சீரான உணவு விநியோகம் மற்றும் அப்பிரதேசத்தில் கிடைக்கின்ற உணவுப்பொருள் தொகை ஆகியவற்றினை கண்

(4 ஆம் பக்கம் பார்க்க)

(நமது நிருபர்)

சுழிபுரம், காரைநகர், வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு இளவாலை கோட்டங்களின் பாடசாலைகளில் கடமையாற்றும் சகல அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்திற்குச் சமுகம் தரும்படி பிரதிக் கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தெல்லிப்பழை, அம்பனை, அளவெட்டி/மல்லாகம், காங்கேசன்துறை கோட்டங்களின் பாடசாலைகளில் கடமை

[4 ஆம் பக்கம் பார்க்க]

மொத்த விற்பனையாளர்

# பொருள்களின் கையிருப்பை அறிவிக்க வேண்டுகோள்

இன்றைய நெருக்கடி நிலையுள்ள இடம் சாதாரண பொதுமக்களுக்கு நாளாந்தம் வேண்டிய உணவுப் பொருள்கள் சீராகக் கிடைக்கும் பொருட்டும் இருக்கும் உணவுப் பொருள்களை ஒழுங்கான முறையில் விநியோகிப்பதற்காகவும் வர்த்தகர்கள் பின்வரும் ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிக்கும்படி வேண்டுகிறோம் என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நேற்று வெளியிட்ட அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் இன்றிலிருந்து அத்தியாவசிய பொருள்களான அரிசி, சீனி, மா, பருப்பு (சகலவகைப்படும் பருப்பு வகைகளும்), தேயிலை, பாம்மா, மண்ணெண்ணெய் தேங்காய் எண்ணெய் ஆகிய பொருள்களை தனியார் விற்பனை நிலையங்கள், மொத்த விற்பனை நிலையங்கள் விற்பனை நிறுத்தும்படி வேண்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தீவகத்தில் சிக்கிய 300 பேர் பற்றிய தகவல் இல்லை

(யாழ்ப்பாணம்)

சமீபத்திய இராணுவ நடவடிக்கையினால் தீவகப்பகுதிகளில் சுமார் 300 பேரைக் காணவில்லை என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் இடம்பெயர்ந்துவந்த தீவக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதுவரையில் அவர்களின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து

## இடம் பெயர்ந்தோருக்கு இலவச உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி, கௌதாரிமுனை ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளிலிருந்து இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு இலவச உலர் உணவு வழங்குவதற்கு யாழ் செயலகத்தினால் முடிவெடுக்கப்பட்டுள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

அரியாலை-பூம்புகார் பகுதியில்

## வதந்தியால் பதற்றம் மக்கள் வெளியேற்றம்

(சுச்சமோட்டை)

அரியாலை பூம்புகார் பகுதிகளில் விஷமிகள் சிலர் பரப்பிய வதந்திகளைத் தொடர்ந்து நேற்றுப் பிற்பகல் பதற்றம் நிலவியது. இதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் அரியாலையில் இடம்பெயர்ந்ததைக் காணமுடிந்தது. பூம்புகார்

(4 ஆம் பக்கம் பார்க்க)

புங்குடுதீவில் இராணுவத்திடம்

## 70 லட். ரூபா பெறுமதியான உணவுப்பொருள் சிக்கியது

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு கூட்டுறவு உணவுக் களஞ்சியசாலைகளிலும், கூட்டுறவு கிளைகளிலும் சுமார் 70 லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் சிக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

சமீபத்திய இராணுவ நடவடிக்கையை அடுத்து மூன்று லொறிகளில் மட்டும் உணவுப் பொருள்கள் யாழ் நகரப் பகுதிக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தவிர கூட்டுறவுச்சங்கத்திற்குரிய பல வாகனங்கள் புங்குடுதீவில் உள்ளதாகவும் கூறப்பட்டது.

(தி)

## சகல தினங்களிலும் திறப்பு

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர்களின் நலன் கருதி சனி, ஞாயிறு உட்பட விடுமுறை தினங்கள் அனைத்திலும் முழு நேரமும் திறந்திருந்து அத்தியாவசியப் பொருள்களின் விநியோகத்தை சகல ப. நோ. கூ. சங்கங்களும் நடைமுறைப்படுத்த வேண்டுமென யாழ் மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## புலிகளின் தாக்குதலுக்கு 3 ஊர்காவற்படை பலி

(மட்டக்களப்பு)

உழவு இயந்திரத்தில் சென்ற ஊர்காவற்படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டதுடன் உழவு இயந்திரமும் பலத்த சேதமடைந்தது. இவர்களது ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

மட்டக்களப்பு வெலிகந்த பகுதியில் உள்ள கோமிசம என்ற இடத்தில்நேற்றுக்காலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

அத்தியாவசியப் பொருள்கள்

## விற்பனையாளருக்கான கலந்துரையாடல்

அத்தியாவசிய பண்டங்கள் விற்பனையாளர்கள், போக்குவரத்து சாதன உரிமையாளர்கள், நெல் ஆலை உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவு வாரியாக இன்று இடம்பெறவுள்ளது.

காலை பத்து மணிக்கு சண்டிலிப்பாய் உ. அ. அ. பிரிவுக்கு மானிப்பாய் வெஸ்லி பாடசாலையிலும்; சங்கானை உ. அ. அ. பி வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும், உடுவில் உ. அ. அ. பிரிவுக்கான நாகம்ஸ் பாடசாலை க லைக்கழகத்திலும் நல்லூர் உ. அ. அ. பி., திவ்வியஜீவன சங்க மண்டபம், சட்டநாதர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## செய்தியாளர் / வானொலி நிகழ்ச்சிகளுக்கு
# பிரதி எழுதுவோர் பதவிகள்

மேற்படி பதவிகளுக்கு தகுதி உள்ளோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. செய்தியாளர் பதவிக்கு செய்திகளை சேகரிக்க எழுதத் தொகுக்கக் கூடிய அனுபவமும் ஆற்றலும் இருக்கவேண்டும் வானொலி நிகழ்ச்சிகளுக்கு பிரதி எழுதுவோர் பதவிக்கு வானொலி நாடகங்கள், உரையாடல்கள், உரைச் சித்திரங்கள், ஏனைய விடயங்கள் எழுதும் ஆற்றல் இருக்க வேண்டும்.

தகுதியானோர் தமது திறமைகளை நிரூபிக்கக் கூடிய நற்சான்றுப் பத்திரங்களுடனும் கல்வித்தகைமைகளையும் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 03-11-91**

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
விளம்பர இல. 118,
மே/பா, ஈழநாதம்.

(B/3380)



## யாழ். மாவட்ட
# அரச ஓய்வூதியர் சங்கம்

27-10-91 ஞாயிறு நடக்கவிருந்த மேற்படி சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் (16-11-91) சனிக்கிழமைக்குப் பின் போடப்பட்டுள்ளது.

சி. மு. தியாகராசா
(கௌரவ செயலர்)

(R/1871)



## வெளிநாட்டுத் தபால்களை இன்றே ஒப்படைப்பீர்! துரித தபால் சேவைக்கு

DHL WORLDWIDE EXPRESS

# DHL

C/o Cosmos Marketing Services
120 (200), K.K.S. Road,
JAFFNA.

(B/3296)



## வரி விளம்பரம்

**தேவை,**
வேப்பம் விதை. இலுப்பம் விதை பெருமளவில் வாங்குகிறோம். மிக்கவைற், யாழ்ப்பாணம். (B/3374)

**தவறிவிட்டது**
கைலாசபிள்ளையார்கோவிலடி சந்திக்கு அருகாமையில் வீட்டுத் திறப்பு ஒன்று தவறிவிட்டது (வெள்ளிநிற திறப்பு) கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். நன்றி.
(B/3378)

வெளிவந்துள்ளது!
விவேக் எழுதிய
## இலையுதிர் வசந்தம்
கவிதைத்தொகுதி
மணி ஓசை வெளியீடு
(B/3379)


## யாழ். ஸ்ரீதர் திரையரங்கில்


# மாங்குளம் தகர்ப்பு
[விவரணப்படம்]
# இனியொரு விதி
[குறும்படம்]

ஆகியன அரங்கம் நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றன.

தினசரி ஒரு காட்சியும் (4 மணிக்கும்) சனி, ஞாயிறுகளில் இரண்டு காட்சிகளும் (4, 6 மணிக்கும்) காண்பிக்கப்படும்.
[B/3203)


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி
சிலிர்த்தெழுமே தமிழீழம்!



**கப்டன் அருந்ததி**
(சண்முகநாதன் சிவரஞ்சினி அவர்கள்)
யாழ் / நாயன்மார்கட்டு

வளை குலுங்கவில்லை இந்த மலர்க்கையில்... | படை முழங்கும்போது எதிரி உடல் குலுங்கிப் போனான்...
வீர ஜனனம் 26-10-67 | வீர மரணம் 4 11-90
(திதி: 25-10-91 வெள்ளிக்கிழமை)

போர் முனையில் பூத்த பூம்பு நெருப்பே தாய்மண்ணை மீட்கத் தாசன் சாட்டினிலே ரஞ்சி அருந்ததியாகி களம் பதித்த காலடியால் அருகிச் முகாம் வீழத் தலைதெறித்தப்பகை ஓட முருக மலர்க்குயிலின் முதன் மூச்சுச் சுதந்திரக் காற்று செருக்களத்துத் தியாக சிலிர்த்தெழுமே தமிழீழம்!

54, அம்மாள் வீதி,
நாயன்மார்கட்டு.
(R/1869)

இங்ஙனம்
குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## பயிற்சிநிலையம் ஆரம்பிக்க நடவடிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர்பிரிவுகளிலும் தையல் பயிற்சி நிலையம் போன்றவற்றை ஆரம்பிப்பதற்கு கிளிநொச்சி கிராமிய அபிவிருத்திச் சங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது இம் மாவட்டத்தில்படித்த வேலை அற்றிருக்கும் யுவதிகளுக்கு தையல் பயிற்சி அளிப்பதன் மூலம் மாதந்தோறும் ஊக்குவிப்பு பணமாகவும் வழங்குவதற்கு மேற்படி சங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது

## அங்கத்தவர் கூட்டம்

ஊர்காவற்றுறைப் பிரிவு, செஞ்சிலுவைச் சங்கத்தின் அங்கத்தவர் பொதுக்கூட்டம் வரும் ஞாயிற்றுக் கிழமை (27 10 91) காலை 9 00 மணிக்கு கிளைப்பிரிவில் நடைபெற உள்ளது.

இச்சங்கத்தின் ஊர்காவற்றுறை கிளைப் பிரிவு 59, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்குகின்றது.

## கண்காட்சி

கொக்குவில் மத்திய கிராம அபிவிருத்திச் சங்க உள்ளூர் உற்பத்திப் பொருட் கண்காட்சி நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கொக்குவில் மத்திய நெசவு நிலை...

# நினைவு கூருகின்றோம்...

**1991-10 25**



கப்டன்
**லோறன்ஸ்**

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் ஒமந்தை - கொக்குவெளி பகுதியில் சிறிலங்காப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய
**கப்டன் லோறன்ஸ்** (மருதலிங்கம் சிவலிங்கம் - கொக்குத்தொடுவாய்)
**லெப். சபா** (சந்தையா சிவமூர்த்தி - கொக்குத்தொடுவாய்)
**2ஆம்லெப். ஜீவன்** (தம்பையா இரத்தினசபாபதி - முள்ளியான்)
**2ஆம்லெப். லலித்** (நடேச ராஜேந்திரன் - முள்ளியவளை)

1987ஆம் ஆண்டு வரவெட்டியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
**கமல்** (செல்லக்குட்டி இளங்கோ - குமுழமுனை)

சேரதிகில் இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 2 தமிழர்கள். சாவகச்சேரி பொதுச் சந்தை மீது இந்தியப்படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட பல தமிழர்கள்

கொக்குவில் இந்துக்கல்லூரி அகதி முகாம் மீது இந்தியப் படையினர் மேற்கொண்ட கவச வாகனத் தாக்குதலின் போது கொல்லப்பட்ட ஏழாலை வாசிகளான ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், இரு பெண் பிள்ளைகள், இரு ஆண் பிள்ளைகள், பேரமகன் உட்பட 6 பேர், இதே தாக்குதலில் கொல்லப்...

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

சிலிர்த்தெழுமே தமிழீழம்!



### கப்டன் அருந்ததி

(சண்முகநாதன் சிவரஞ்சினி அவர்கள்)

யாழ் / நாயன்மார்கட்டு

வளை குலுங்கவில்லை படை முழங்கும்போது எதிரி
இந்த மலர்க்கையில்... உடல் குலுங்கிப் போனான்...

வீர ஜனனம் 26-10-67 வீர மரணம் 4 11-90

(திதி: 25-10-91 வெள்ளிக்கிழமை)

போர் முனையில் பூத்த பூம்ப நெருப்பே
தாய்மண்ணை மீட்கத் தாசன் சாட்டினிலே
ரஞ்சி அருந்ததியாய் தனம் பதித்த காலடியால்
தருக்கர் முகாம் வீழத் தலைதெறித்தப்பலை ஓட
முருக்க மலர்க்குயிலின் முதல் மூச்சுச் சுதந்திரக்காற்றின்
செருக்களத்துத் தியாக சிலிர்த்தெழுமே தமிழீழம்!

54, அம்மாள் வீதி, இச்சனம்
நாயன்மார்கட்டு. குடும்பத்தினர்,
(R/ 1869) உற்றார், உறவினர்

## 90-ம் நாள் நினைவஞ்சலி



| தாயின் மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 16 | 29 |
| 04 | 07 |
| 1963 | 1991 |

### திரு. கந்தையா தனரத்தினம்

திதி: 26-10-1991

இன்முகத்தோடு உறவுமுறை கூறுவாயே
அன்பான வார்த்தையால் ஆதரித்து மகிழ்வாயே
தனம், தனம் என்று ஆசையுடன் அழைப்போமே
பண்பான உன்வாழ்க்கை கனவாக முடிந்ததுவோ

நாளை எமது இல்லத்தில் நடைபெறும் 90 ஆம் நாள் அந்தியேட்டி கிரியையில் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்

இல 08 தாய், மனைவி, மகன்,
8 ஆம் வாய்க்கால் சகோதரர்கள்
உருத்திரபுரம். மைத்துனர்கள்.

(R/1859)


**DHL**

C/o Cosmos Marketing Services
120 (200), K.K.S. Road,
JAFFNA.

(B/3296)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி புண்ணியகாந்தன் பவானி

(கணேஸ் பவானி)

மண்டைதீவு மகாவித்தியாலய உயர்தர மாணவி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12-01-1970 | 04-12-1990 |

மலர் ஒன்று மலர்ந்து நறுமணம் வீசுவது போல் உன்நினைவு மலரும் எங்கள் அனைவரது மனதிலும் நீங்காத மணம் வீசுகின்ற மகளே! வீட்டுக்கு மூத்தவளாய், குலவிளக்காய் பிறந்த எம்மினிய மகளே, இருபது ஆண்டுகள் உயிர்த்துடிப்புள்ள மலரும் உன் முகம் கண்ட நாங்கள் இந்த ஓராண்டு துடிப்பற்ற உன் நிழற்படம் கண்டு தவியாய்த் தவிக்கின்றோம.

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொள்ளச் சென்று விட்டீர்
உன் நினைவில் உதிரும் கண்ணீர்ப் பூக்களை மாலையாகத் தொடுக்கின்றோம்.

உன் நினைவால் துயருறும்
அன்புள்ள அப்பா, அம்மா,
சகோதர சகோதரிகள்.

மண்டைதீவு தெற்கு.
8ஆம் வட்டாரம்.

(R/1845)

### ஆரம்பிக்க நடவடிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் தையல் பயிற்சி நிலையம் போன்றவற்றை ஆரம்பிப்பதற்கு கிளிநொச்சி கிராமிய அபிவிருத்திச் சங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இம் மாவட்டத்தில் படித்து வேலையற்றிருக்கும் யுவதிகளுக்கு தையல் பயிற்சி அளிப்பதன் மூலம் மாதந்தோறும் ஊக்குவிப்பு பணமாகவும் வழங்குவதற்கு மேற்படி சங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

### அங்கத்தவர் கூட்டம்

ஊர்காவற்றுறைப் பிரிவு, செஞ்சிலுவைச் சங்கத்தின் அங்கத்தவர் பொதுக்கூட்டம் வரும் ஞாயிற்றுக் கிழமை (27 10 91) காலை 9 00 மணிக்கு கிளைப்பிரிவில் நடைபெற உள்ளது.

இச்சங்கத்தின் ஊர்காவற்றுறை கிளைப் பிரிவு 59, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்குகின்றது.

### கண்காட்சி

தொல்புரம் மத்திய கிராம அபிவிருத்திச் சங்க உள்ளூர் உற்பத்திப் பொருட் கண்காட்சி நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு தொல்புரம் மத்திய நெசவு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச் சங்கத் தலைவர் அ. சுகதேவன் தலைமையில் நடைபெறும் இக்கண்காட்சி விழாவிற்கு சங்கானை வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் து வைத்திலிங்கமும், யாழ் மாவட்ட தமிழீழ ஆய்வு நிறுவன பொறுப்பாளர் சுந்தரராசனும் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர்.

### உலர் உணவு விநியோகம்

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 91ஆம் ஆண்டு, ஐப்பசி மாதத்திற்கான உலர்உணவு விநியோகம் ஜெமீமா பீக்சர் பலஸ் கே. கே. எஸ் வீதி கிளைகள் 1,2 3.5.13 ஜும்மா மொஸ்கியூ லேன் கிளைகள் 6 6,9 ஜும்மா மொஸ்கியூ லேன் கிளைகள் 7,8,10,11 வழங்கப்படும்.

1,4 7 கிளைகளில் இம் மாதம் 28ஆம் திகதியும், 2, 6,8கிளைகளில் இன்றும் 29 ஆம் திகதியும், 3,9,10கிளைகளில் 26ஆம் திகதியும் 30ஆம் திகதியும், 5,6.11,13 கிளைகளில் 27ஆம் திகதியும் 31ஆம் திகதியும் விநியோகம் இடம் பெறும். (தி)

**1991-10 25**



### கப்டன் லோறன்ஸ்

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் ஓமந்தை - கொக்குவெளி பகுதியில் சிறிலங்காப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய

கப்டன் லோறன்ஸ் (மருதலிங்கம் சிவலிங்கம் - கொக்குத்தொடுவாய்)

லெப்.சபா (கந்தையா சிவமூர்த்தி - கொக்குத்தொடுவாய்)

2ஆம்லெப். ஜீவன் (தம்பையா இரத்தினசபாபதி - முள்ளியான்)

2ஆம்லெப். லலித் (நடேசு ராஜேந்திரன் - முள்ளியவளை)

1987ஆம் ஆண்டு கரவெட்டியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

கமல் (செல்லக்குட்டி இளங்கோ - குழுமுனை)

சேரதீவில் இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 2 தமிழர்கள். சாவகச்சேரி பொதுச் சந்தை மீது இந்தியப்படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட பல தமிழர்கள்

கொக்குவில் இந்துக்கல்லூரி அகதி முகாம் மீது இந்தியப் படையினர் மேற்கொண்ட கவச வாகனத் தாக்குதலின் போது கொல்லப்பட்ட ஏழாலை வாசிகளான ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், இரு பெண் பிள்ளைகள், இரு ஆண் பிள்ளைகள், பேரமகள் உட்பட 6பேர், இதே தாக்குதலில் கொல்லப்பட்ட மற்றும் 36 பொதுமக்கள்

1988ஆம் ஆண்டு வவுனியாவில் பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பணிமனையில் தங்கியிருந்தபோது, இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மருத்துவர், பொது சுகாதாரப் பரிசோதகர் ஆகிய 2 தமிழர்கள்

யாழ். மருத்துவமனை வீதியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட சங்கானையைச் சேர்ந்த தனியார் கல்வி நிலைய விஞ்ஞான ஆசிரியர்

மல்லாகத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த வர்த்தக சங்கத்தலைவர்

1989ஆம் ஆண்டு அம்பாறையில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நிந்தவூரைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்

1990ஆம் ஆண்டு பலாலிமுகாமைச் சூழ்ந்தபகுதிகளில் சிறிலங்காப்படையுடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய

திலீப் (அப்புக்குட்டி வரதன் - ஊரெழு வடக்கு)

வெற்றி (சோமசுந்தரம் சுதாகரன் - சுழிபுரம் மேற்கு)

சேரன் (பெருமாள் நாகேந்திரம் - மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு பெரியகுளம் பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/ 3376)

### ❋ சிந்தனைக்கு ❋

நான் செய்தாக வேண்டும்; செய்தே தீருவேன்;
செய்ய என்னால் இயலும்; செய்வது என் கடமை;
இதோ செய்கிறேன்.

— றிச்சர்ட் ஷெரிடன்


# ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 25-10-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2298
த.பெ.எண் 05


## சமூகத்தின் நன்மைகருதி பதுக்கலை நிறுத்துக!

யாழ். குடாநாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையையும் குடாநாட்டுக்கு வெளியில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட சில இராணுவ நடவடிக்கைகளையும் ஊரடங்கு உத்தரவுகளையும் தொடர்ந்து அத்தியாவசியப் பொருள்களுக்கு யாழ் குடாநாட்டில் பெரும் தட்டுப்பாடும் விலையேற்றமும் ஏற்பட்டுள்ளது. ஆனால் இவ் விலையேற்றமும், தட்டுப்பாடும் பற்றாக்குறையினாலோ அன்றி வழங்கல் இன்மையினாலோ ஏற்பட்டனவல்ல. கொள்ளை லாபம் சம்பாதிக்கும் நோக்கத்தினால் பொருள்களைப் பதுக்கியமையினால் ஏற்பட்டவையாகும்.

இப்பதுக்கல் நடவடிக்கையினால் மக்கள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். ஒன்றரை வருடத்திற்கு மேலாக பொருளாதார முற்றுகைக்குள் இருப்பதினாலும் வேலைவாய்ப்புக்களை பெருமளவில் இழந்துள்ளமையினாலும் மக்கள் பெரும் பொருளாதார நெருக்கடியில் உள்ளனர்.

அத்தோடு இலட்சக்கணக்கான மக்கள் இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்து அகதிகளாகவும் உள்ளனர். இதன் காரணமாக மக்கள் அன்றாடப் பொருள்களை சாதாரண விலையில் கூட கொள்வனவு செய்ய முடியாத நிலையிலும் உள்ளனர். இந்நிலையில் ஏற்படும் விலை உயர்வுகள் மக்களை பட்டினிச் சாவின் விளிம்பிற்கே இட்டுச் செல்லும்.

கடந்த ஒன்றரை வருடமாகவே அடம்பனூடாக அத்தியாவசியப் பொருள்களை கொண்டுவந்து சேர்ப்பதென்பது நெருக்கடி மிக்கதும், அபாயகரமானதுமான ஒரு தொழில் துறையாகவும் இருந்து வருகின்றது என்பது உண்மை தான். ஆனால் திடீரென ஏற்படும் யுத்த சூழ்நிலையில் செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தி கொள்ளை லாபம் சம்பாதிக்க முற்படுவது சரியுமல்ல; ஏற்புடையதுமல்ல.

தமிழர் தாயகத்தில் இன்று இவ்வளவு நெருக்கடியின் மத்தியில் வாழும் (துரோகிகள் தவிர) சகலரும் ஏதோ ஒருவகையில் தமது பங்களிப்பை போராட்டத்திற்கு நல்கியே வருகின்றனர். இதில் முதலாளி, தொழிலாளி, ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடுகள் கிடையாது. இந்நிலையில் தொடர்ந்தும் போராட்டம் வலுவடைய வேண்டும். தமிழ் மக்கள் சுதந்திரமாகவும் கண்ணியமாகவும் வாழ வேண்டுமானால் நாம் ஒருவரை ஒருவர் பேண வேண்டும். ஒருவரின் துன்பத்தில் ஒருவர் பங்குகொள்ள வேண்டும். உதவ வேண்டும். லாப நோக்கு நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். சக தமிழ் மக்களையும் தமது சகோதரர்களாக உடன் பிறப்புக்களாகக் கொள்ள வேண்டும்.

எமது சமூகத்தில் எப்பகுதியில் ஏற்படும் பலவீனமும் எதிரிக்கு நன்மையாகவே அமையும். பதுக்கலினாலும் கள்ளச் சந்தையினாலும் பெரும் செல்வம் கிடைக்கப் பெறினும் இனவாத அரசாங்கத்திடம் இருந்து அதைப் பாதுகாப்பது [illegible]

### வியாபாரியை ஏமாற்றிவிட்டு

## 24 போத். ம. எண்ணெயுடன் இளைஞன் தலைமறைவு

மண்ணெண்ணெய் வியாபாரியை ஏமாற்றிவிட்டு இருபத்தி நான்கு போத்தல் மண்ணெண்ணெயுடன் இளைஞர் ஒருவர் தலைமறைவான சம்பவம் ஒன்று முத்திரைச் சந்தையில் நடைபெற்றது.

மேற்படி சம்பவம் பற்றித் தெரியவருவதாவது சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் முத்திரைச்சந்தைப் பகுதியில் மண்ணெண்ணெய் வியாபாரியான சி. மகாலிங்கம் என்ற வயோதிபரிடம் அவரது பைபருக்குள் இருபத்தி நான்கு போத்தல் மண்ணெண்ணெயைத் தரும்படி கேட்டாராம். வியாபாரி எண்ணெயைக் கொடுக்க இரண்டாம் குறுக்குத்தெருவில் வீடு உள்ளது. உங்கள் மகனை அனுப்புங்கள் பைபரையும், காசையும் கொடுத்துவிடுகிறேன் எனக் கூறி அவரது மகனான பதினைந்து வயதுச் சிறுவனையும் கூட்டிச் சென்றாராம். அங்கே ஓர் கடைக்குச் சென்று அந்த உரிமையாளரிடம் இந்தச் சிறுவன் சித்தசுவாதீனமற்றவர். இவரைச் சிறிதுநேரம் வைத்திருங்கள். மண்ணெண்ணெயை வைத்துவிட்டு வந்து கூப்பிடுகிறேன் எனக் கூறிவிட்டுசிறுவனிடம் 'நீர் இங்கே நில்லும். நான் சில நிமிடங்களில் வருகிறேன்' எனக்கூறிவிட்டுத் தலைமறைவாகிவிட்டார்.

சில நிமிடங்களின் பின் சிறுவன் கடை உரிமையாளரிடம் இவர் எங்கே போகிறார்? எனக் கேட்டபோதே மேற்படி சம்பவம் தெரியவந்தது.

இதனால் வியாபாரிக்கு மூவாயிரம் ரூபா நஷ்டமேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. உரிமையாளர் இது சம்பந்தமாக விடுதலைப் புலிகளிடம் புகார் செய்துள்ளார்.

## சங்குப்பிட்டி பகுதியில் புகை மண்டலம்

பூநகரி சங்குப்பிட்டி இறங்குதுறை, ஆலடிச் சந்தி போன்ற இடங்களில் நேற்று முன்தினம் காலை புகைமண்டலமாக காட்சியளித்ததை அவதானிக்க முடிந்தது. இப்பகுதியில் உள்ள தேனீர்க் கொட்டகைகளையும் மற்றும் குடிசைகளையும் இப்பகுதியில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவப்படையினர் தீயிட்டுக்கொளுத்தியிருக்கலாம் எனக்கூறப்பட்டது.

### தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ்

## ஐந்து இல. தமிழர்கள் தமிழகத்தில் தடுத்துவைப்பு

இரண்டு மாதங்களுக்கு முன்னர் திருச்சியில் கைது செய்யப்பட்ட ஐந்து இலங்கைத் தமிழர்கள் தற்போது தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஐவரும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களென்றும், இவர்களிடமிருந்து பெருமளவு ஆயுதங்களும் மற்றும் வெடிப்பொருட்களும் மீட்கப்பட்டதாகவும் தமிழக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## மாவட்ட ஆணையாளர் நியமிப்பதில் இழுபறி

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள மாவட்டங்களுக்கு சிறிலங்கா அரசினால் மாவட்ட ஆணையாளர்களை நியமிப்பதில் இழுபறிநிலை தொடர்ந்து வருவதாக அறியப்படுகிறது.

இதன் காரணமாக தமிழ் மாவட்டங்களில் அரசாங்க அதிபர்களே மாவட்ட ஆணையாளர் பொறுப்பை தொடர்ந்து சுமக்க வேண்டிய நிலை இருப்பதாகவும் மாகாண சபையின் கீழ் இந்த மாவட்ட ஆணையாளர் நியமனம் இடம்பெற்றிருப்பதால் அதிகாரம் வழங்கல் விடயத்தில் குழப்பமிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஈ)

## இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை, குப்பிழான் பகுதிகளை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இளைஞர் ஒருவர் காயமடைந்திருக்கிறார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்பவத்தில் ஏழாலையைச் சேர்ந்த சிவகுமார் (வயது 17) என்ற இளைஞரே காயமடைந்திருக்கிறார். (ஈ)

## மந்திகை ஆஸ்பத்திரி மீண்டும் செயற்படுகிறது

மந்திகை அரசினர் வைத்தியசாலை மீண்டும் வழமை போல் செயற்படத் தொடங்கியுள்ளது.

கடந்த மாதம் வடமராட்சிப் பகுதியில் நிகழ்ந்த சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து பாதுகாப்புக் கருதி மூடப்பட்ட மேற்படி வைத்தியசாலை தற்போது மீண்டும் செயற்படுகின்றது.

வடமராட்சிப் பகுதியிலிருந்து அச்சம் காரணமாக வெளியேறி வலிகாமம் பகுதிகளிலும் தங்கியிருந்த மக்களில் தற்போது ஐம்பது வீதமானோர் திரும்பித்தத்தமது இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

சகல வள நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் இயக்கப்பட்டு நிவாரணக் கொடுப்பனவு வேலைகள் நடைபெறுகின்றன.

## "பைபிளின் கதை" சிறுவர் செய்யுள்

சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட நூல்களில் பாவலவன் எழுதிய 'பைபிள் கதைகள்' என்னும் நூல் சிறுவர் செய்யுளாக அமைந்துள்ளது.

'கதையைப் படிக்கும்
கையோடு கல்விப் பெறும்
பெருமாறு புதிய புதிய
சொற்களையும் பொருளோடு இங்கு தந்துள்ளேன்'

-என்று இந் நூலின் பாயிரவாயிலில் குறிப்பிட்டுள்ள கவிஞர், சிறுவர்களின் உள்ளத்தில் ஆழமாகப் பதியக் கூடிய பல வரிகளை அதில் படைத்து

-என்று குறிப்பிடும் ஆசிரியர் இறைதந்தையின் படைப்பாம் ஆதாம் (முதல் மனிதன் உயிர்பெற்றதையும் ஆதாமின் விலா எலும்பினின்று ஏவாள் படைக்கப்பட்டதையும் மிக நேர்த்தியாக கூறிச்செல்கிறார்

இரு வண்ணங்கள் கொண்ட அட்டைப் படத்தில் அழகாக வெளிவந்த இந்நூல் 33 பக்கங்களைக் கொண்டது. அச்சுத்தாள் பற்றாக்குறையான (தற்போதைய) காலத்தில் புத்தகம் வெளியிட முனைந்திருப்பது போற்றுதலுக்குரியது

### கணித விஞ்ஞான

## பயிலுனர் ஆசிரியருக்கு விண்ணப்பங்கள் கோரல்

விஞ்ஞான, கணித பயிலுனர் ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. உயர்தரப்பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தோர் விண்ணப்பிக்கலாம்.

மேற்படி பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தூயகணிதம், பிரயோக கணிதம், விவசாயவியல், பௌதிகவியல், இரசாயனவியல், விலங்கியல், தாவரவியல் ஆகிய பாடங்களில் ஏதாவது மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் 18வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் நவம்பர் பதினோராம் திகதிக்கு முன் பரீட்சை ஆணையாளர், பரீட்சைத் திணைக்களம், மலே வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில்

கள் யாழ். மாவட்டம் (41) சாவகச்சேரி (47) யாழ்ப்பாணம் (48 கிளிநொச்சி (48ஏ) பளை (48பி) தெல்லிப்பளை(49) பருத்தித்துறை (50. விண்ணப்பதாரி ஒருவர் இரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு விண்ணப்பிக்கலாம். இதில் முதலாவது தாம் நிரந்தரமாக வசிக்கும் இடத்தையும் இரண்டாவது அண்மையிலுள்ள மாவட்டத்தில் ஓர் உதவி அரசாங்க அதிபர் பிரிவையும் தெரிவு செய்யலாம்,

விண்ணப்பதாரிகள் ஐம்பது ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டி அதன் மேல் கையொப்பமிட வேண்டும். மேற்படி விண்ணப்பத்தினை பாடசாலை அதிபர், சமாதான நீதிவான், சட்டத்தரணி மற்றும் வருடாந்தம் 2520 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுபவர்களில் யாராவது சாட்சிப்படுத்தல் செய்யலாம்.

## பாகிஸ்தானில் அணு ஆற்றல்

## புலிகளின் குரல் வானொலி ஓராண்டு நிறைவுப் போட்டிகள் பற்றிய அறிவித்தல்

'புலிகளின் குரல்' வானொலி ஆரம்பித்து 1991-11-21 உடன் ஓராண்டு நிறைவு பெறுவதை யொட்டி பின்வரும் போட்டிகள் நடாத்தப்பட்டு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படுவதோடு, தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் ஒலிபரப்புக்கும் ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்களின் ஆக்கங்களை 31-10-1991க்குப் பிந்தாமல் புலிகளின் குரல்' யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

1. வானொலி நாடகப்பிரதி

வானொலி நாடகப் பிரதி ஆகக்கூடியது 20நிமிடங்களுக்குள் ஒலிபரப்பக் கூடியதாக அமைதல் வேண்டும்.
பிரதிகள் எழுத்துத்தாளில் 15 பக்கங்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

2. சிறுகதை

சிறுகதைகள் இதற்கு முன் ஒலிபரப்பப்படாதனவாகவும் பிரசுரிக்கப்படாதனவாகவும் இருத்தல் வேண்டும்.
சிறுகதைகள் எழுத்துத்தாளில் 8 பக்கங்களுக்கு மேற்படாது அமைதல் வேண்டும்.

3. கவிதை

கவிதைகள் மரபுக் கவிதைகளாகவோ அல்லது புதுக்கவிதைகளாகவோ இருக்கலாம். ஒலிபரப்பும் நேரம் 3 நிமிடங்களுக்கு குறையாமலும் 5 நிமிடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. புலிகளின் குரல் பற்றிய விமர்சனம்

கடந்த ஒரு வருட காலமாகப் 'புலிகளின் குரல்' வானொலியில் ஒலிபரப்பாகிய நிகழ்ச்சிகள் பற்றிய விமர்சனம் 200 சொற்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

குறிப்பு:

ஆக்கங்கள் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சுப் பொறித்து அனுப்பல் வேண்டும்.

ஆக்கங்களின் மூன்று பிரதிகள் அனுப்பி வைப்பதுடன் அவை தமது சுய முயற்சியில் எழுதப்பட்டதென்றும், இதற்கு முன் ஒலிபரப்பவோ அல்லது வேறெவ்வகையிலும் வெளிவரவில்லையெனவும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

படைப்பாளிகள் தங்கள் பெயர் முகவரிகளை ஆக்கங்களில் குறிப்பிடாமல் தனித்தாளில் எழுதி இணைத்து அனுப்பி வைக்கவும்.

ஆக்கங்கள் எமது போராட்டத்தை மையப்படுத்தியோ அல்லது முன்னெடுத்துச் செல்வதாகவோ அல்லது சமூக மேம்பாடு கருதியதாகவோ அமைதல் வேண்டும்.

விதிமுறைகளுக்கமையாமல் அனுப்பி வைக்கப்படும் ஆக்கங்கள் நிராகரிக்கப்படும்.

பொறுப்பாளர்
"புலிகளின் குரல்"
திரு நல்வேலி,
யாழ்ப்பாணம்.

(B/3369)

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீர வீர

மத்திய கிழக்கு சமாதான மாநாட்டிற்கு

## பிரதமர் சமீத் தலைமையில் இஸ்ரேலியத் தூதுக்குழு

(ஜெருசலேம்)

மட்றிட்டில் அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் மேற்காசிய சமாதான மாநாட்டில் இஸ்ரேலிய பிரதிநிதிகள் குழுவிற்கு அந்நாட்டுப் பிரதமர் இர்ஷாக் சமீர் தலைமை ஏற்றுச் செல்லவுள்ளாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளியுறவு அமைச்சர்களின் நிலையிலேயே இந்த சமாதான பேச்சுக்கள் நடைபெற வேண்டுமென அமெரிக்காவும், சோவியத் யூனியனும் தெரிவித்துள்ள விருப்பத்திற்கு முரணாக சமீர் இந்த அறிவிப்பினை தெரிவித்துள்ளார்.

இதேநேரம் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் இது குறித்து கருத்து வெளியிடுகையில் "இஸ்ரேலிய பிரதமர் தமது நாட்டின் குழுவிற்கு தலைமை தாங்க முடிவு செய்திருப்பதன் மூலம் பேச்சுக்களில் கடுமையான பிடிவாதப் போக்கை பின்பற்ற தீர்மானித்திருக்கிறார் என்பதை எடுத்துக் காட்டிவிட்டார்" என்று குறிப்பிட்டார்.

பதுக்கலை

காணித்தல், தனியார் வர்த்தகர்களிடமுள்ள அத்தியாவசிய உணவுப் பொருள்களின் தொகையை மதிப்பீடு செய்தல், உணவுப் பொருள் பதுக்கல், விலையேற்றம் ஆகியவற்றை கட்டுப்படுத்துதல், பணத்திற்கு பொருள்களை கொள்வனவு செய்ய முடியாதவர்கள் என எதிர்பார்க்கப்படும் 25000 குடும்பங்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களை அரச சார்பற்ற பொது ஸ்தாபனங்கள் மூலம் கொள்வனவு செய்து மக்களுக்கு விநியோகம் செய்யும் நடைமுறையை செயற்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்

நேற்றைய கூட்டத்தில், இதுவரை 'அ' 'உ' அட்டைகளுக்கு வழங்கப்பட்டு வந்த உலர் உணவு விநியோகத்திற்குப் பதிலாக புதிய அட்டவணையின் கீழ் ப.நோ. கூ. சங்கங்கள் மூலமும் வர்த்தக இணைக்கங்கள் மூலமும் வாராந்த உலர் உணவு விநியோகம் செய்யப்படும் என்றும், அரிசி, கோதுமை மா, சீனி, பால்மா, பருப்பு, தேங்காய் எண்ணெய், உப்பு ஆகிய பொருள்கள் அத்தியாவசியப் பொருள்கள் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது. விநியோகிக்கப்படும் அளவுகளும், விலையும் நான்காம் பக்கத்தில் உள்ள அட்டவணையில் உள்ளது. (தி)

சுதந்திரக்கட்சி

செயலாளர் போட்டியில் அநுரா பண்டாரநாயக்கா போட்டியிட்டு வெற்றி பெற்றதையடுத்து அக்கட்சிக்குள் மேலும் குழப்பநிலை ஏற்பட்டுள்ளதாகவும், இக்கட்சிக்குள் சிறிமா ... எதிராக பல அரசியல் குற்றச்சாட்டுக்கள் ...

பொருள்களின்

இதேநேரம் ஒவ்வொரு மொத்த விற்பனையாளர்களும் தங்களிடமிருக்கும் பொருள்களின் தொகை, இருப்பிடம் ஆகிய விபரங்களை ... பகுதிகளில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் தற்போது இயங்கும் குழுவிடம் கொடுக்க வேண்டும்.

இன்றிலிருந்து மேற்கூறிய அத்தியாவசியப் பொருள்கள் ஒரு இடத்திலிருந்து வேறு இடத்திற்கு எடுத்துச் செல்வதை நிறுத்திக் கொள்ளவும். அப்படி தேவை நிமித்தம் கொண்டு செல்வதாக இருந்தாலும் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயங்கும் இதற்கென நியமிக்கப்பட்டிருக்கும் குழுவின் அனுமதிப்பத்திரம் பெற்றே செல்ல வேண்டும். மேற்கூறிய ஒழுங்கு விதிகளை அனைத்து வர்த்தகர்கள், அரிசியாலை உரிமையாளர்கள் மற்றைய தொழிற்சாலை உரிமையாளர்கள் அனைவரும் கடைப்பிடிக்கும்படி வேண்டுகிறோம்.

மேற்கூறிய ஒழுங்கு விதிகள் நாம் மேற்கொள்வதற்குரிய காரணங்கள், அரசாங்கத்தின் திட்டமிட்ட நடவடிக்கைகளால் பொதுமக்களின் உணவுத் தேவை பாதிக்கப்படாது இருக்க இங்குள்ள உணவுப் பொருள்களை ஒழுங்கான முறையில் விநியோகம் செய்வதற்காகவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை அறியத் தருகின்றோம்.

ஆசிரியர் பரீட்சை

விண்ணப்பம் தொடர்பான முக்கிய சாராம்சங்களை உள்ளூர் பத்திரிகையின் மூலமும், விளம்பரப் பலகையிலும் போடுதலின் மூலம் இப்போட்டிப் பரீட்சைக்குத் தகுதியான விண்ணப்பதாரிகளுக்குப் பயன் பெறச் செய்வதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்யுமாறு வடக்கு-கிழக்கு கல்வி அமைச்சின் செயலாளர் 'பிரதேசப் பணிப்பாளர்களைப் பணித்...

## 6-ம் மாத நினைவஞ்சலி



வீரஜனனம்

08 - 01 - 1972

வீரமரணம்

30 - 04 - 1991

### வீரவேங்கை மதியழகன்

கண்ணே கண்ணின் கண்மணியே எதிர்கண்டிட
நம்மைக் கலங்காமல் காப்பாய் என்று
நாம் கனவு கண்டிடாமையா ஆனால்
நீ எம் கண்ணைக் கட்டிவிட்டு
தாயக மீட்புக்காய் பிரிந்த நேரம் கேட்டு
வருவாய் என்றே ஒருநாள் வருவாய் வருவாய் என்று
நாம் வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தோம்
காத்திருந்த விழியினிலே கண்ணீரை மட்டும்
தந்துவிட்டு
சொந்த மண்ணுக்காய் மாண்டாய்
கத்துகின்றோம் கதறுகின்றோம் கதிகலங்கி
நிற்கின்றோம்
துடிக்கின்றோம் துவழ்கின்றோம் சக்தியின்றி
வீழ்கின்றோம் ஆனாலும்
மெல்ல எழுந்து நிற்கின்றோம் ஏனெனில்
நீ கோழையாய் மாயவில்லை வீரமரணம்
கண்டாய்!
நீ வீரவேங்கையானாய் என்ற இனிய நினைப்
பொன்றிலே
காலத்தை நாம் ஓட்டிச் செல்கின்றோம்

முத்தமிழ் வீதி,
1-ம் ஒழுங்கை,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

உன் பிரிவால் வாடும்
க. சுப்பிரமணியம்
குடும்பத்தினர்.
(R/1872)

வதந்தி

பகுதியில் இராணுவத்தினர் தரை இறங்கிவிட்டதாக பரவிய வதந்தியே இப் பரபரப்புக்கும் பதற்றத்துக்கும் காரணமாகும் எனினும் சிலமணி நேரங்களில் நிலைமை வழமைக்கு திரும்பியது. இராணுவத்தினர் எவரும் பூம்புகார் பகுதியில் தரையிறங்கவில்லை என்பதை விடுதலைப்புலிகள் உறுதி செய்தபின் மக்கள் மீண்டும் தத்தமது இருப்பிடங்களுக்கு திரும்பினர் (43)

விற்பனையாளருக்கான

கோயிலடி நல்லூரிலும், சோப் பாய், உ... நீர்வேலி ... தியார் இந்து ... நல்லூரிலும், பனை ... பிபுலேர ... கல்வி வளர்ச்சிக் கழகத்திலும் பருத்தித்துறை ...

இடம்பெயர்ந்தோருக்கு

மேற்படி இந்து கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்து 450 குடும்பங்கள் இடம்பெயர்ந்து அரியாலை பகுதியை அண்டிய இடங்களில் தஞ்சமடைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது

தீவகத்தில்

நிலையைத் தம்மால் அறிந்து சொல்ல முடியவில்லை என்றும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்

இதனை அடுத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தீவகத்துடன் தொடர்பு கொண்டு காணமற் போனவர்களின் நிலையை அறிவதற்கு முயற்சி மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (தி)

புலிகளின்

கவிதையின் மரபுக் கவிதைகளாகவோ அல்லது புதுக்கவிதைகளாகவோ இருக்கலாம். ஒலிபரப்பும் நேரம் 3 நிமிடங்களுக்கு குறையாமலும் 5 நிமிடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. புலிகளின் குரல் பற்றிய விமர்சனம்

கடந்த ஒரு வருட காலமாகப் 'புலிகளின் குரல்' வானொலியில் ஒலிபரப்பாகிய நிகழ்ச்சிகள் பற்றிய விமர்சனம் 200 சொற்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

குறிப்பு:

ஆக்கங்கள் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சுப் பொறித்து அனுப்பல் வேண்டும்.

ஆக்கங்களின் மூன்று பிரதிகள் அனுப்பி வைப்பதுடன் அவை தமது சுய முயற்சியில் எழுதப்பட்டதென்றும், இதற்கு முன் ஒலிபரப்பவோ அல்லது வேறெவ்வகையிலும் வெளிவரவில்லையெனவும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

படைப்பாளிகள் தங்கள் பெயர் முகவரிகளை ஆக்கங்களில் குறிப்பிடாமல் தனித்தாளில் எழுதி இணைத்து அனுப்பி வைக்கவும்.

ஆக்கங்கள் எமது போராட்டத்தை மையப்படுத்தியோ அல்லது முன்னெடுத்துச் செல்வதாகவோ அல்லது சமூக மேம்பாடு கருதியதாகவோ அமைதல் வேண்டும்.

விதிமுறைகளுக்கமையாமல் அனுப்பி வைக்கப்படும் ஆக்கங்கள் நிராகரிக்கப்படும்.

பொறுப்பாளர்
"புலிகளின் குரல்"
திரு நல்வேலி,
யாழ்ப்பாணம்.

(B/3369)

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீர ஜனனம்
25 - 11 - 1958



வீர மரணம்
25 - 10 - 1985

### 2 ஆவது லெப். ஜீவன்
### (இரத்தினசாமி)

கண்ணை இமைகாப்பதுபோல்
மண்ணை நேசித்தவன் - நீ
எண்ணத்தில் நிறைந்திருப்பாய்
எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் ஆறு கழிந்தபின்னும்
ஆறாத துயருடனே
நீண்டன நாட்கள்
நிச்சயம் வெல்வோம்.

இவருடன் வீரமரணமெய்திய வேங்கைகளின் ஆத்மசாந்தி வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

வடமராட்சி கிழக்கு,
வெற்றிலைக்கேணி.
(B/3386)
உம் பிரிவால் துயருறும்
அக்கா

கொள்வனவு செய்ய முடியாதவர்கள் என எதிர்பார்க்கப்படும் 25000 குடும்பங்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களை அரச சார்பற்ற பொதுஸ்தாபனங்கள் மூலம் கொள்வனவு செய்து மக்களுக்கு விநியோகம் செய்யும் நடைமுறையை செயற்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

நேற்றைய கட்டத்தில், இதுவரை 'அ' 'உ' அட்டைகளுக்கு வழங்கப்பட்டு வந்த உலர் உணவு விநியோகத்திற்குப் பதிலாக புதிய அட்டவணையின் கீழ் ப.நோ. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் வர்த்தக இணைக்கணங்கள் மூலமும் வாராந்த உலர் உணவு விநியோகம் செய்யப்படும் என்றும், அரிசி, கோதுமை, சீனி, பால்மா, பருப்பு, தேங்காய் எண்ணை, உப்பு ஆகிய பொருட்கள் அத்தியாவசியப் பொருட்கள் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது. விநியோகிக்கப்படும் அளவுகளும், விலையும் நான்காம் பக்கத்தில் உள்ள அட்டவணையில் உள்ளது. (தி)

### சுதந்திரக்கட்சி

செயலாளர் போட்டியில் அநுரா பண்டாரநாயக்கா போட்டியிட்டு வெற்றிபெற்றதையடுத்து அக்கட்சிக்குள் மேலும் குழப்பநிலை ஏற்பட்டுள்ளதாகவும், இக்கட்சிக்குள் சிறிமாவுக்கு எதிராக பல அரசியல் குற்றச்சாட்டுக்கள் வைக்கப்பட்டுவருவதாகவும் தனிநபர் அதிகாரத்தை எதிர்த்து அநுரா போர்க்கொடி தூக்கியுள்ளார் என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### ஒப்பரேசன்

இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க வேண்டுமென்பதே இலங்கை இராணுவத்தின் நோக்கமென்றும், அந்நோக்கத்தை மிகவும் நெருங்கி விட்டோம் என்றும் தெரிவித்தார்.

### இன்றைய

நிகு எமது தலைவர்களால் முடியாவிடில் நாங்கள் நீதியை குண்டுகள் மூலம் பெறுவோம் என இளம் தமிழ் தீவிரவாதிகள் நினைத்தனர்.

தேசிய பாதுகாப்பு அமைச்சராக ஐந்து வருடங்கள் கடமையாற்றிய உங்கள் சகபாடியான லலித் அத்துலத்முதலியினால் சாதிக்க முடியாததை கடந்த இரண்டரை வருடகாலத்தில் எனது நிர்வாகத்தின் கீழ் நாங்கள் விடுதலைப் புலிகளையும், ஜே.வி.பி. யினரையும் அழித்து ஒழிப்பதில் பெருவெற்றி கண்டுள்ளோம் என்றும் தனது கடிதத்தில் பிரேமதாசா குறிப்பிட்டுள்ளார்.

இடத்திற்கு [illegible] செல்வதை நிறுத்திக் கொள்ளவும் அப்படி தேவை நிமித்தம் கொண்டு செல்வதாக இருந்தாலும் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயங்கும் இதற்கென நியமிக்கப்பட்டிருக்கும் குழுவின் அனுமதிப்பத்திரம் பெற்றே செல்ல வேண்டும். மேற்கூறிய ஒழுங்கு விதிகளை அனைத்து வர்த்தகர்கள், அரிசியாலை உரிமையாளர்கள் மற்றைய தொழிற்சாலை உரிமையாளர்கள் அனைவரும் கடைப்பிடிக்குபடி வேண்டுகிறோம்.

மேற்கூறிய ஒழுங்கு விதிகள் நாம் மேற்கொள்வதற்குரிய காரணங்கள். அரசாங்கத்தின் திட்டமிட்ட நடவடிக்கைகளால் பொருளாதார உணவுத் தேவை பாதிக்கப்படாது இருக்க இங்குள்ள உணவுப் பொருள்களை ஒழுங்கான முறையில் விநியோகம் செய்வதற்காகவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றோம்.

### ஆசிரியர் பரீட்சை

விண்ணப்பம் தொடர்பான முக்கிய சாராம்சங்களை உள்ளூர் பத்திரிகையின் மூலமும், விளம்பரப் பலகையிலும் போடுதலின் மூலம் இப்போட்டிப் பரீட்சைக்குத் தகுதியான விண்ணப்பதாரர்களுக்குப் பயன் பெறச் செய்வதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்யுமாறு வடக்கு-கிழக்கு கல்வி அமைச்சின் செயலாளர் பிரதேசப் பணிப்பாளர்களைப் பணித்துள்ளார்.

தாமதமாகிக் கிடைக்கும் மற்றும் தபாலில் காணாமற் போகும் விண்ணப்பங்களுக்குத் தாம் பொறுப்பில்லை என்றும் கொழும்பு பரீட்சைப் பகுதி அறிவித்துள்ளது.

யாழ். கல்வித் திணைக்களத்தில் விண்ணப்பம் தொடர்பான முக்கிய சாராம்சங்களையும், அறிவுறுத்தல்களையும் அறிந்துகொள்ள பல விண்ணப்பதாரிகள் ஆசிரியர் நிர்வாகக் கிளை இலிகிதரைச் சூழ்ந்து கொள்வதை அவதானிக்க முடிகிறது. திணைக்கள விளம்பரப் பலகையில் மாதிரி விண்ணப்பப்படிவமும் ஒட்டப்பட்டுள்ளது.

காத்திருந்த விழியினிலே கண்ணீரை மட்டும்
தந்துவிட்டு
சொந்த மண்ணுக்காய் மாண்டதாய்
கத்துகின்றோம் கதறுகின்றோம் கதிகலங்கி
நிற்கின்றோம்
துடிக்கின்றோம் துவழ்கின்றோம் சக்தியின்றி
வீழ்கின்றோம் ஆனாலு
மெல்ல எழுந்து நிற்கின்றோம் ஏன்
நீ கோழையாய் மாயவில்லை வீரமரணம்
கண்டாய்!
நீ வீரவேங்கையானாய் என்ற இனிய நினைப்
பொன்றிலே
காலத்தை நாம் ஓட்டிச் செல்கின்றோம்

முத்தமிழ் வீதி,
1-ம் ஒழுங்கை,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

உன் பிரிவால் வாடும்
க. சுப்பிரமணியம்
குடும்பத்தினர்.
(R/1872)

### வதந்தி

பகுதியில் இராணுவத்தினர் தரை இறங்கிவிட்டதாக பரவிய வதந்தியே இப் பரபரப்புக்கும் பதற்றத்துக்கும் காரணமாகும் எனினும் சிலமணி நேரங்களில் நிலைமை வழமைக்கு திரும்பியது. இராணுவத்தினர் எவரும் பூம்புகார் பகுதியில் தரையிறங்கவில்லை என்பதை விடுதலைப்புலிகள் ஊர்ஜிதம் செய்தபின் மக்கள் மீண்டும் தத்தமது இருப்பிடங்களுக்கு திரும்பினர் (43)

### விற்பனையாளருக்கான

கோயிலடி நல்லூரிலும், கோப்பாய், உ.அ.அ.பி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும், பளை உ.அ.அ.பி புலோப்பளை கல்வி வளர்ச்சிக் கழகத்திலும் பருத்தித்துறை உ.அ.அ.பி வட இந்து மகளிர் கல்லூரி, பருத்தித் துறையிலும் கரவெட்டி உ.அ.அ.பி நெல்லியடி மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

காலை 11 மணிக்கு யாழ்ப்பாணம் உ.அ.அ.பி யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்திலும், தெல்லிப்பளை உ.அ.அ.பி. அளவெட்டி மகாஜன கல்லூரியிலும் நடைபெறும்.

நண்பகல் 12 மணிக்கு சாவகச்சேரி உ.அ.அ.பி தென்மராட்சி வேத்திரா படமாளிகை சாவகச்சேரியிலும், மருதங்கேணி உ.அ.அ.பி அம்பன் அரசினர் பாடசாலையிலும் நடைபெறவுள்ளது.

### இடம்பெயர்ந்தோருக்கு

வலிகாமம் வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த 450 குடும்பங்கள் இடம்பெயர்ந்து அரியாலை பகுதியை அண்டிய இடங்களில் தஞ்சமடைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

### தீவகத்தில்

நிலைமையைத் தம்மால் அறிந்து கொள்ள முடியவில்லை என்றும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனை அடுத்து சர்வோதய செஞ்சிலுவைச் சங்கம் தீவகத்துடன் தொடர்பு கொண்டு காணாமற் போனவர்களின் நிலைமை அறிவதற்கு முயற்சி மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (தி)

### புலிகளின்

11.50 மணியளவில் உழவு இயந்திரத்தில் வந்தவர்கள் கவசப் படையினர் புலிகளின் தாக்குதலுக்குள்ளாகி மரணமடைந்தவர்களாவர்.

இவர்களிடமிருந்து இரண்டு துப்பாக்கிகளும் எட்டு தோட்டாக்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

### அதிபர்கள்

யாழ்ப்பாணம் யாழ்/மகாஜன கல்லூரி மண்டபத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை (28-10-91) அன்று பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொள்ளும்படியும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## 24-10-1991 திகதியிலிருந்து பணத்திற்கான புதிய உலர் உணவு விநியோக விபரம்

| | பொருள்களின் விபரம் | 1 அங். எடை | 1 அங். ரூ.ச | 2 அங். எடை | 2 அங். ரூ.ச | 3 அங். எடை | 3 அங். ரூ.ச | 4 அங். எடை | 4 அங். ரூ.ச | 5 அங். எடை | 5 அங். ரூ.ச |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | அரிசி | 2 கிலோ | 27.60 | 4 கி | 55.20 | 6 கி | 82.80 | 7 கி | 96.60 | 10கி | 138.00 |
| 2. | மாவு | 2 ,, | 24.50 | 4 ,, | 49.00 | 4 ,, | 49.00 | 5 ,, | 61.25 | 8 ,, | 98.00 |
| 3. | சீனி | 1/4 ,, | 6.23 | 500 | 12.45 | 500 | 12.45 | 500 | 12.45 | 750 | 18.68 |
| 4. | பருப்பு | 250கிரா | 11.75 | 250 | 11.75 | 250 | 11.75 | 500 | 23.50 | 500 | 23.50 |
| 5. | தேயிலை | — | | 100 | 8.50 | 100 | 8.50 | 100 | 8.50 | 100 | 8.50 |
| 6. | பால்மா | — | | — | | 1 பக் | 38.00 | 1 பக் | 38.00 | 1 பக் | 38.00 |
| | மொத்தம் | | 70.08 | | 136.90 | | 202.50 | | 260.10 | | 324.68 |

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.